# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.07 நாள் 20.11.2025

| | | | |
|---|---|---|---|
| CC. No. | 230/2025 | | |
| பெயர் | ராதிகா | த/பெ. | செல்வமணி |
| வயது | 39 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | நெடுங்காடு | தாலுக்கா | காரைக்கால் |

(எதிரிகள் ஆஜர்.).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது நன்னிலத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டு குடித்தனம் நடத்தி வருகிறேன். எதிரிகள் மகாலெட்சுமி, ஆரோக்கியராஜ் ஆகியோர்களை தெரியும். கடந்த 2011-ஆண்டு மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் மருந்தக பிரிவில் மருந்து எடுத்து கொடுக்கும் பணிக்காக ஆரோக்கியராஜும், மகாலெட்சுமியும் என்னை அழைத்தார்கள். அதன் பின்னர், நான் அங்கு மருந்தக பிரிவில் விற்பனையாளராக பணிக்கு சென்றேன். நான் மருந்துகளையும் மட்டும் எடுத்துக்கொடுப்பேன். நான் வாடிக்கையாளர் கொடுக்கும் பணத்தினை மகாலெட்சுமியிடமோ அல்லது ஆரோக்கியராஜிடமோ கொடுப்பேன் அவர்கள் மீதி தொகை இருந்தால் என்னிடம் கொடுப்பார்கள். நான் அதனை வாடிக்கையாளர்களிடம் கொடுப்பேன். பில் புக்கில் இருப்பவைகளை என்னிடம் மகாலெட்சுமி சிட்டாவில் எழுத சொல்லுவார். தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 81-ன் கீழான விசாரணை அதிகாரியிடம் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.12** ஆகும். என்னை வணிககுற்றப்புலனாய்வு போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

1ம் எதிரி அந்த மருந்தகத்தில் மருந்தாளராக பணிபுரிந்தார். என்னை மதிவாணன் என்ற விசாரணை அதிகாரி என்னை விசாரிக்கவில்லை.

CJM, MAYILADUTHURAI.

எந்தவொரு அதிகாரியும் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை. அந்த கையெழுத்து எப்போது எந்த நேரத்தில் போட்டேன் என்றால் ஞாபகம் இல்லை.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

S. Pattu

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.